TNTS040002672023

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்**
**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை :- திருமதி. கே. சுதாராணி, எம்.எல்.,**
**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை**
**தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி**

**2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09 ஆம் நாள் வியாழக்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 25-ஆம் நாள்)**

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.320/2023**
**(CNR.No.TNTS04-000267-2023)**

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா, குமந்தாபுரம், வடக்குவிளை காலனி தெரு, கதவு எண்.4/46A என்ற முகவரியில் வசித்துவரும் செல்லப்பா அவர்களின் குமாரர், 40 வயதுடைய கலைஞர்செல்வம்

... மனுதாரர்

/எதிர்/

1. தென்காசி மாவட்டம், சிவகிரி தாலுகா, வாசுதேவநல்லூர் கோட்டையூர், காளியம்மன் கோவில் தெரு, கதவு எண்.9/3 ல் குடியிருக்கும் சதாசிவம் அவர்கள் குமாரர் ராமச்சந்திரன்

2. Reliance General Insurance Company having Office at No.55, Sri Meenakshi Plaza, 1st floor, 80 Feet Road, Anna Nagar, Madurai – 625 020 through its Divisional Manager

... எதிர்மனுதாரர்கள்

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 11.08.2023 |
| மனு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 25.08.2023 |
| மனு உத்தரவு நாள் | : | 09.07.2026 |

இந்த மனுவானது கடந்த 25.06.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. L. பூராஜா அவர்களும், 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. J. சம்சுதீன் அவர்களும் முன்னிலையாகியும், 1 ஆம் எதிர்மனுதார் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டும் ஆஜராகாததால், ஒருதலைபட்சமாக தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்வளிப்பு

இந்த மனுவானது, மனுதாரரால் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 166-ன்கீழ் எதிர்மனுதார்களிடமிருந்து இழப்பீடாக ரூ.20,00,000/-மும், பின்வட்டியும் மற்றும் வழக்கு செலவுத்தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

கடந்த 18.04.2023 ம் தேதியன்று, மாலை 05.00 மணியளவில், மனுதார், தனக்கு பாத்தியப்பட்ட, பதிவு எண் ஏற்படாத இரு சக்கர மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் தனது மனைவி மேனகா என்பவரை வைத்துக்கொண்டு, மேற்படி வாகனத்தை மனுதார், கொல்லம் – திருமங்கலம் சாலையில் மங்களாபுரம் பேருந்து நிறுத்தத்திற்கு வடக்கேயுள்ள தர்கா செல்லும் பாதை அருகில், தெற்கிலிருந்து வடக்காக, சாலையின் இடதுபுறம் ஓரமாக, கவனமாகவும், நிதானமாகவும், மெதுவாகவும், சாலை விதிகளை கடைபிடித்தும் ஓட்டிச் சென்றுகொண்டிருந்தபோது, மேற்படி சாலையில் 1 ஆம் எதிர்மனுதார், தனக்கு பாத்தியப்பட்ட TN79 K 1929 என்ற பதிவு எண் கொண்ட Toyota காரை வடக்கிலிருந்து தெற்காக, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலைவிதிகளை கடைபிடிக்காமலும் ஓட்டிவந்து, மனுதார் ஓட்டிவந்த இரு சக்கர மோட்டார் வாகனத்தின் பின்பக்கமாக வந்து பலமாக மோதி விபத்தினை ஏற்படுத்திவிட்டார். மேற்படி விபத்தில் மனுதாருக்கு இடது கை புஜத்திற்கு கீழ் எலும்பு முறிவு கொடுங்காயமும், வலதுகால் முட்டியில் சிராய்ப்புக் காயமும், வலது கால் முட்டுக்கு கீழ் சிராய்ப்பு காயமும், இடது கால் கணுக்காலில் எலும்பு முறிவு காயமும், இடதுபக்க

இடுப்புக்கு கீழ் ஊமைக்காயமும், இடது கையின் முட்டியில் சிராய்ப்பு காயமும், இடது கை தோள்பட்டையில் சிராய்ப்புக் காயமும் ஏற்பட்டது. உடனடியாக மனுதாருக்கு கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, பின் தென்காசி, அரசு தலைமை மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டார். அதன்பின்னர் நவீன சிகிச்சை மேற்கொள்வதற்காக மனுதார், ஆவுடையானூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்து சிகிச்சை மேற்கொண்டார். விபத்து சம்பந்தமாக, கடையநல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, குற்ற எண்.131/2023–ல் இ.த.ச., 279, 337 மற்றும் 338–ன்கீழ் 1ஆம் எதிர்மனுதார் மீது குற்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் 1ஆம் எதிர்மனுதார் ஓட்டிய வாகனமானது, 2ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு முன்பு மனுதார், விவசாயம் மற்றும் சொந்தமாக பால்மாடு வளர்த்தும் மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/– சம்பாதித்து வந்தார். விபத்திற்கு பின்பு மனுதாரால் முன்புபோல் எவ்வித வேலையும் செய்ய இயலவில்லை. எனவே, மனுதாரருக்கு, எதிர்மனுதார்கள் இழப்பீடாக ரூ.20,00,000/– கொடுக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>2ஆம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை. விபத்து சமயத்தில், 1ஆம் எதிர்மனுதாரின் வாகனத்திற்கு விபத்தின்போது செல்லத்தக்க காப்பீடு எதுவும் அமலில் இல்லை. அதனால் இந்த எதிர்மனுதார், மனுதாருக்கான இழப்பீட்டை வழங்கக் கடமைப்பட்டவரில்லை. மேலும், விபத்தின்போது TN79 K 1929 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரான 1ஆம் எதிர்மனுதாருக்கு அச்சமயம் செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் எதுவும் இல்லை. எனவே, காப்பீடு விதிமீறல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த எதிர்மனுதார், எவ்வித இழப்பீட்டு தொகையும் செலுத்தக் கடமைப்பட்டவரில்லை. விபத்தானது, இரு சக்கர வாகனத்தை ஓட்டிய மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால்தான் ஏற்பட்டுள்ளது. ஆக, TN79 K 1929 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை ஓட்டிய 1ஆம் எதிர்மனுதார் விபத்திற்கு

எவ்வகையிலும் காரணமல்ல. மனுதார் பயணம் செய்த வாகனத்தின் உரிமையாளரும், அதன் காப்பீட்டாளரும் இம்மனுவுக்கு அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். ஆகையால் இந்த எதிர்மனுதார் எவ்வித இழப்பீட்டு தொகையும் செலுத்தக் கடமைப்பட்டவரில்லை. விபத்தினால் மனுதாருக்கு சாதாரண சிறு காயங்களே ஏற்பட்டுள்ளன. அவைகளும் தற்போது குணமாகிவிட்டன. மனுதாரின் வயது, வருமானம், தொழில் மற்றும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள், அதற்கு மனுதார் மேற்கொண்ட மருத்துவ சிகிச்சைகள் ஆகியவைகளை மனுதாரே தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யவேண்டும். கோரியுள்ள இழப்பீட்டு தொகையும், அதற்கு கேட்டுள்ள வட்டி விகிதமும் அபரிமிதமானவை. மற்றபடி மனுதார் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் ஆகும். அவை அனைத்தும் இந்த எதிர்மனுதாரால் மறுக்கப்படுகின்றன. எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

4. மனுதாரின் மனுவுரை, 2ஆம் எதிர்மனுதாரின் எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இம்மனுவின் தீர்வுக்காக கீழ்க்கண்ட பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினைகள்</u>**

1. இந்த விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

2. இம்மனுவில் மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா?

3. அவ்வாறு கிடைக்கத்தக்கது எனில் எந்த எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையை வழங்க கடமைப்பட்டவர்?

4. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?

5. இம்மனுவைப் பொறுத்து, மனுதாரர் திரு. கலைஞர்செல்வம் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.11 சான்றாவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளன. மேலும், இம்மனுவில் நீதிமன்ற சான்றாவணம் எண்.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6. **பிரச்சனை எண் 1–க்கான தீர்வு**

இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்தானது, யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது? என பரிசீலனை செய்யும்போது, இம்மனுவின் மனுதார் கலைஞர் செல்வம் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 18.04.2023 ம் தேதியன்று, மாலை 05.00 மணியளவில், தான், தனக்கு பாத்தியப்பட்ட, பதிவு எண் ஏற்படாத இரு சக்கர மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் தனது மனைவியை அமர்த்திக்கொண்டு, மேற்படி வாகனத்தை, கொல்லம் – திருமங்கலம் சாலையில் மங்களாபுரம் பேருந்து நிறுத்தத்திற்கு வடக்கேயுள்ள தர்கா செல்லும் பாதை அருகில், தெற்கிலிருந்து வடக்காக, சாலையின் இடதுபுறம் ஓரமாக, கவனமாகவும், நிதானமாகவும், மெதுவாகவும், சாலை விதிகளை கடைபிடித்தும் ஓட்டிச் சென்றுகொண்டிருந்தபோது, மேற்படி சாலையில் 1 ஆம் எதிர்மனுதார், அவருக்கு பாத்தியப்பட்ட TN79 K 1929 என்ற பதிவு எண் கொண்ட Toyota காரை வடக்கிலிருந்து தெற்காக, அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், சாலைவிதிகளை கடைபிடிக்காமலும் ஓட்டிவந்து, தான் ஓட்டிச் சென்ற இரு சக்கர மோட்டார் வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்திவிட்டதாக சாட்சியமளித்துள்ளார்.

7. மேலும், மனுதாரான ம.சா.1 தனது சாட்சியத்தில், மேற்படி விபத்தில் தனக்கு இடது கை புஜத்திற்கு கீழ் எலும்பு முறிவு கொடுங்காயமும், வலதுகால் முட்டியில் சிராய்ப்புக் காயமும், வலது கால் முட்டுக்கு கீழ் சிராய்ப்பு காயமும், இடது கால் கணுக்காலில் எலும்பு முறிவு காயமும், இடதுபக்க இடுப்புக்கு கீழ் ஊமைக்காயமும், இடது கையின் முட்டியில் சிராய்ப்பு காயமும், இடது கை தோள்பட்டையில் சிராய்ப்புக் காயமும் ஏற்பட்டதாகவும், உடனடியாக தனக்கு கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, பின் தென்காசி, அரசு தலைமை மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு

சிகிச்சை மேற்கொண்டதாகவும், அதன்பின்னர் நவீன சிகிச்சை மேற்கொள்வதற்காக தான், ஆவுடையானூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்து சிகிச்சை மேற்கொண்டதாகவும், விபத்து சம்பந்தமாக, கடையநல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, குற்ற எண்.131/2023–ல் இ.த.ச., 279, 337 மற்றும் 338–ன்கீழ் 1ஆம் எதிர்மனுதார் மீது குற்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

8. மேலும், இதுசம்பந்தமாக மனுதார், கடையநல்லூர் காவல்நிலையத்தில் ஒரு புகாரினை கொடுத்து, அதனடிப்படையில் குற்ற எண்.131/2023–ல் இ.த.ச., 279, 337–ன்கீழ் கடந்த 18.04.2023 தேதியில் 1ஆம் எதிர்மனுதார் மீது ம.சா.ஆ.1ன் அடிப்படையில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், ம.சா.ஆ.1 ஆவணத்தில், இந்த விபத்தானது 1ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவினாலும், அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டுள்ளது என்றும், இந்த விபத்தில் தானும், தன் மனைவியும் காயமடைந்துள்ளதாகவும், இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

9. இவ்வாறு கடந்த 18.04.2023ம் தேதி நடந்த விபத்தில் மனுதார் காயமடைந்த நிலையில், இந்த விபத்தானது யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றுள்ளது? எனப் பார்க்கும்போது, 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில், இந்த விபத்தானது, மனுதாரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையினாலும்தான் ஏற்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த விபத்தைப் பொறுத்து, விபத்தானது 1ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதா? எனப் பார்க்கும்போது, விபத்தில் காயமடைந்த மனுதாரின் விபத்து பதிவேடு ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வழக்கு விபத்தானது, 1ஆம் எதிர்மனுதார், அவர் ஓட்டிவந்த வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்ததால் ஏற்பட்டதாக மனுதார் தரப்பில் ம.சா.1 ஆல் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. மேலும், இதுசம்பந்தமாக, ம.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில், காவல்துறையினர் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்துள்ளனர்.

10. இவ்வாறு ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையிலும், ம.சா.1–ன் சாட்சியங்களின் அடிப்படையிலும், இதைப் பொறுத்து 2ஆம் எதிர்மனுதார் இத்தீர்ப்பாயத்தின் முன்பு ஆஜராகி எதிருரை தாக்கல் செய்திருந்தபோதிலும், மனுச் சங்கதிகளை பொய்ப்பிக்கவும், எதிருரை சங்கதிகளை மெய்ப்பிக்கவும் எவ்வித தகுந்த சாட்சிய, சான்றாவணங்களையும் எதிர்மனுதார்கள் தரப்பில் முன்னிலைப்படுத்தப் படவில்லை. மேலும், இம்மனுவில் 1ஆம் எதிர்மனுதார், நீதிமன்றத்தின் முன்பு முன்னிலையாகாமல் தோன்றா தரப்பாராக தீர்மானிக்கப்பட்டுள்ளார். மேலும், இந்த மனுவைப் பொறுத்து, ம.சா.1–டம் கவனக்குறைவு சம்பந்தமாக குறுக்கு விசாரணையில் கேள்விகள் எழுப்பியபோது, ம.சா.1 அதற்கு மறுத்தே சாட்சியமளித்துள்ளார். எனவே, வழக்கு விபத்தானது, 1ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளதாக மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள நிலையில், அதை மறுத்துரைக்கும் எதிர்மனுதார்கள் தரப்பில், கவனக்குறைவு குறித்து எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தி எடுத்துரைக்கப்படாத நிலையில், விபத்திற்கு மேற்படி 1ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையே காரணம் என முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, பிரச்சினை எண்.1–ஐப் பொறுத்து இவ்வாறாக முடிவு செய்யப்படுகிறது.

11. <u>**பிரச்சனை எண்.2–க்கான தீர்வு**</u>

இம்மனுவில் மனுதாருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? எனப் பார்க்கும்போது, கடந்த 18.04.2023 தேதியில் ஏற்பட்ட விபத்தினால், மனுதாருக்கு இடது கை புஜத்திற்கு கீழ் எலும்பு முறிவு கொடுங்காயமும், வலதுகால் முட்டியில் சிராய்ப்புக் காயமும், வலது கால் முட்டுக்கு கீழ் சிராய்ப்பு காயமும், இடது கால் கணுக்காலில் எலும்பு முறிவு காயமும், இடதுபக்க இடுப்புக்கு கீழ் ஊமைக்காயமும், இடது கையின் முட்டியில் சிராய்ப்பு காயமும், இடது கை தோள்பட்டையில் சிராய்ப்புக் காயமும் ஏற்பட்டதாகவும், உடனடியாக மனுதாருக்கு கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, பின் தென்காசி, அரசு தலைமை மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டதாகவும், அதன்பின்னர் நவீன சிகிச்சை மேற்கொள்வதற்காக

மனுதார், ஆவுடையானூரில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்து சிகிச்சை மேற்கொண்டதாகவும் கூறப்பட்டு, ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மனுதாருக்கு விபத்தினால் காயங்கள் ஏற்பட்டுள்ளதால், இதைப் பொறுத்து இந்த மனுதாருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, பிரச்சினை எண்.2–ஐப் பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

12. **பிரச்சனை எண்.3–க்கான தீர்வு**

இந்த மனுவைப் பொறுத்து, எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தொகையை வழங்க கடமைப்பட்டவர்? எனப் பார்க்கும்போது, இந்த மனுவில் பிரச்சினை எண்.1–ஐ பொறுத்து, வழக்கு விபத்தானது 1 ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால் ஏற்பட்டுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த 1 ஆம் எதிர்மனுதார் ஓட்டிய வாகனம், 1 ஆம் எதிர்மனுதாருக்குத்தான் சொந்தமானது என்பதும், மேலும், மேற்படி TN79 K 1929 என்ற பதிவு எண் கொண்ட Toyota வாகனமானது விபத்து சமயத்தில் 2 ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டு, ம.சா.ஆ.3 இயக்கூர்தி ஆய்வாளரின் ஆய்வறிக்கை, ம.சா.ஆ.4, காப்பீட்டு சான்றிதழ் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ம.சா.ஆ.3–ஐ பரிசீலனை செய்கையில், மேற்படி வாகனமானது 1 ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டது என்றும், 1 ஆம் எதிர்மனுதாருக்குரிய வாகனத்தின் காப்பீடானது 29.11.2024 வரை அமலில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ம.சா.ஆ.4 காப்பீட்டு சான்றிதழை பரிசீலனை செய்கையில், 1 ஆம் எதிர்மனுதாரின் வாகனத்திற்குரிய காப்பீடானது 30.11.2021 முதல் 29.11.2024 வரை அமலில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், விபத்து சமயத்தில், 1 ஆம் எதிர்மனுதாருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இருந்தது என்பது ம.சா.ஆ.5 ஓட்டுநர் உரிமத்திலிருந்து புலனாகிறது.

13. இதுகுறித்து, 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில் எதிருரையில் மறுத்துள்ளபோதிலும், 2 ஆம் எதிர்மனுதாரின் வாகனமானது தங்களது காப்பீடு நிறுவனத்தில், விபத்து சமயத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்பது குறித்தும், 1 ஆம்

எதிர்மனுதாருக்கு விபத்தின்போது செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது குறித்தும், 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தி எடுத்துரைக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு காப்பீடு குறித்து, தகுந்த சாட்சிய, சான்றாவணங்களை 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படாத நிலையில், மனுதார் தரப்பில் மேற்படி வாகனமானது 2 ஆம் எதிர்மனுதார் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, மேற்படி காப்பீடானது விபத்து சமயத்தில் அமலில் இருந்தது என தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதால், விபத்து சமயத்தில் மேற்படி 1 ஆம் எதிர்மனுதாரின் TN79 K 1929 என்ற பதிவு எண் கொண்ட Toyota வாகனமானது 2 ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, ஷை காப்பீடானது அமலில் இருந்தது என இவ்வாயம் முடிவு செய்கிறது.

14. ஆக, விபத்து தேதியான 18.04.2023 அன்று, வழக்கு விபத்தானது, 1 ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட TN79 K 1929 என்ற பதிவு எண் கொண்ட Toyota வாகனத்தினை ஓட்டிவந்த 1 ஆம் எதிர்மனுதாரின் அதிவேகத்தினாலும், அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டதாக முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி வாகனத்தின் உரிமையாளரான 1 ஆம் எதிர்மனுதார், தன் வாகனத்தினை 2 ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ள நிலையில், பகரப்பொறுப்பின் அடிப்படையில் மனுதாருக்குரிய இழப்பீட்டினை காப்பீட்டாளரான 2 ஆம் எதிர்மனுதாரே வழங்கக் கடமைப்பட்டவர் என முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, பிரச்சினை எண்.3–ஐப் பொறுத்து இவ்வாறாக முடிவு செய்யப்படுகிறது.

15. **<u>பிரச்சனை எண்.4–க்கான தீர்வு</u>**

இந்த மனுவில் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதார் கலைஞர் செல்வத்திற்கு விபத்து நடந்த தேதியான 18.04.2023 தேதியில் 40 வயது என்றும், அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், மனுதார், விவசாயம் மற்றும் பால்மாடு வளர்த்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/–

வருமானம் ஈட்டிவந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அதனைப் பொறுத்து, மனுதார் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இவ்வாயத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், விபத்தானது கடந்த 2023ம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், கடந்த 2023ம் ஆண்டின் விலைவாசி உயர்வு, பொருளாதார நிலையின்படியும் மற்றும் மற்ற காரணிகளின் அடிப்படையிலும், மனுதாருக்கு தோராயமாக ரூ.9,000/- மாத வருமானமாக எடுத்துக்கொள்ளலாம் என முடிவு செய்யப்படுகிறது. மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, அக்காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டு, மனுதார் குறைந்தது மூன்று மாத காலங்களுக்கு எந்த வேலையும் செய்திருக்க முடியாது என்பதை கருத்திற்கொண்டு, ஒரு மாதத்திற்கு ரூ.9,000/- வீதம், மூன்று மாதத்திற்கான வருமான இழப்பாக, 3 x 9,000 = மொத்தம் ரூ.27,000/- வருமான இழப்பு என்ற தலைப்பில் மனுதாருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

16. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், இதுசம்பந்தமாக மனுதாருக்கு ஏற்பட்ட பாதிப்பை கண்டறிய மாவட்ட மருத்துவக் குழுமத்திற்கு மனுதார் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். மேற்படி மாவட்ட மருத்துவ குழுமம் மனுதாரை பரிசீலனை செய்து, அவருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர ஊனத்திற்கு ஆய்வு செய்து, அவருக்கு 25% பகுதியான நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அந்தச் சான்று நீ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இதனைப் பொறுத்து அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை மற்றும் நீ.சா.ஆ.1ன் அடிப்படையில், மனுதாருடைய உடலில் எந்த ஒரு பாகமும் முழுவதுமாக துண்டிக்கப்பட்டு, அவர் முன்பு செய்த வேலையான, விவசாயம் மற்றும் பால்மாடு வளர்த்தல் வேலையை செய்ய முடியாத அளவுக்கோ அல்லது வேறு வேலை எதுவும் செய்ய முடியாத அளவுக்கோ ஊனம் இருந்ததாக மனுதார் தரப்பில் வேறு ஆவணங்களை முன்னிலைப்படுத்தி எடுத்துரைக்கப்படவில்லை. ஆகவே, இந்த மனுவை பொறுத்து பெருக்கல் குறியீட்டு எண் மூலம் மொத்த வருமான இழப்பினை கணக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என முடிவு செய்யப்படுகிறது. மேலும், கீழ்க்கண்ட வழக்கின்படி, ***M. Revanth Kumar /Vs/ M/s Sun-X-Concrete India Private Limited, Chennai – 6000 045 and another in CMA No.13 of 2025 dated 10.01.2025***

என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற வழக்கில் முடிவு செய்துள்ளபடி, கடந்த 2022ம் ஆண்டில் நடைபெற்ற விபத்துக்களைப் பொறுத்து 1% ஊனத்திற்கு 10,000/- வீதம் வழங்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளதால், இம்மனுவைப் பொறுத்து மனுதாருக்கு 25% ஊனத்திற்கு 25 x 10,000 = 2,50,000/- பகுதியான ஊனத்திற்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

17. மேலும், மனுதார் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டபோது, செலவீனங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.7, மருத்துவ ரசீதுகளை பரிசீலனை செய்கையில், அவைகளில் மொத்தம் ரூ.75,567.50/- மருத்துவ செலவீனத்திற்காக மனுதாருக்கு செலவானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை தவிர மனுதார் தரப்பில் வேறு எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் மருத்துவ செலவீனத்திற்காக இவ்வாயத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட தொகையான ரூ.75,567/- மனுதாருக்கு மருத்துவச் செலவீனம் என்ற தலைப்பில் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

18. மேலும், மனுதார் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டதாகவும், அதன்பின்பு மனுதார் வெளிநோயாளியாகவும் சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளதாக மனுவிலும், தனது சாட்சிய, சான்றாவணங்களிலும் குறிப்பிட்டுள்ளதைக் கருத்திற்கொண்டும், மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மையை கருத்திற்கொண்டும், நீ.சா.ஆ.1 அறிக்கையை கருத்திற்கொண்டும் மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.50,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில் போக்குவரத்து செலவு ஏற்பட்டதாகக் கூறி மனுதார் தரப்பில் ம.சா.ஆ.8 ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி ரசீதுகளில் மனுதாருக்கு ரூ.6,000/- போக்குவரத்து செலவு ஏற்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, மேற்படி ம.சா.ஆ.8 ரசீதுகளில்

குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ.6,000/– மனுதாருக்கு போக்குவரத்து செலவு என்ற தலைப்பில் கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டு, அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மனுதாருக்கு தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக ரூ.20,000/– கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது மனுதார் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் இழப்பிற்காக ரூ.1,000/–மும், மனுதாரருக்கு மருத்துவமனையில் உதவியாக இருந்த நபரைப் பொறுத்து ஒரு நாளைக்கு ரூ.400/– வீதம் 60 நாட்களுக்கு 60 x 400 = 24,000/– Attendant Charges என்ற முறையில் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், மனுதார் தரப்பில் அவரது வாகனத்தை பழுது பார்த்ததற்காக தொகை செலவானதாக குறிப்பிடப்பட்டு ம.சா.ஆ.11 ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.11 ரசீதினை பரிசீலிக்கையில், அந்த ரசீதினை வழங்கிய நிறுவனத்தின் முத்திரையோ, அந்நிறுவனத்தின் உரிமையாளரோ, மேலாளரோ கையெழுத்து எதுவும் செய்யவில்லை. அதனால், மேற்படி ம.சா.ஆ.11 ரசீதினை இவ்வாயம் நிராகரிக்கிறது. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகை எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | 25% பகுதி நிரந்தர ஊனத்திற்காக | ரூ.2,50,000/– |
| 2. | வருமான இழப்புக்காக | ரூ.27,000/– |
| 3. | அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக | ரூ.20,000/– |
| 4. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.6,000/– |
| 5. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.50,000/– |
| 6. | ஆடை, அணிகலன்கள் இழப்புக்காக | ரூ.1,000/– |
| 7. | Attendant Charges–க்காக | ரூ.24,000/– |
| 8. | மருத்துவ செலவீனங்களுக்காக | ரூ.75,567/– |
| | **மொத்தம்** | **ரூ.4,53,567/–** |

இவ்வாறாக, பிரச்சினை எண்.4–ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

19. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாருக்கு ரூ.4,53,567/-ஐ, 2 ஆம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியும், மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு எண்.6456273001-ல் IFSC Code No – IDIB000T009 க்கு இ-மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், அதற்கான வட்டியையும், செலவுத்தொகையையும் வைப்பீடு செய்யப்பட்டவுடன் மனுதார் உடனடியாக இத்தீர்ப்பாயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.3,908.50/-ல், ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/-ஐ கழித்து போக உள்ள தொகை ரூ.3,888.50/-ஐ மனுதார் இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.11,536/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்மனு ஏற்கனவே மனுதாரின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு மனுதாருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

As per the Judgment of the Honourable High Court in Tr.Cmp Nos.264 to 281 of 2020 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd Versus Ayyanar and others, dated 11.05.2020. No separate decree passed.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 09 ஆம் தேதியன்று திறந்த தீர்ப்பாயத்தில் அவையறிய பகரப்பட்டது.

K SUDHARANI

Digitally signed by K SUDHARANI
Date: 2026.07.10 18:58:50 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி**

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள்**</u>

ம.சா.1 திரு. கலைஞர் செல்வம் (மனுதார்)

<u>**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**</u>

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 18.04.2023 | முதல் தகவல் அறிக்கையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.2 | 18.04.2023 | விபத்து பதிவேட்டின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.3 | 21.04.2023 | மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.4 | – | காப்பீட்டுச் சான்றிதழின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.5 | – | 1 ஆம் எதிர்மனுதாருக்குரிய ஓட்டுநர் உரிமத்தின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.6 | – | மனுதாருக்குரிய வாகனத்தின் பதிவுச் சான்றிதழின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.7 | – | மருத்துவ ரசீதுகள் |
| ம.சா.ஆ.8 | – | போக்குவரத்துக்கான ரசீதுகள் |
| ம.சா.ஆ.9 | – | மனுதாருக்குரிய ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.10 | – | மனுதாரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல்பக்கத்தின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.11 | 11.11.2023 | வாகன பழுது பார்த்ததற்கான ரசீது |

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**</u> இல்லை

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**</u> இல்லை

<u>**நீதிமன்ற சான்றாவணங்கள்**</u>

நீ.சா.ஆ.1 24.07.2025 பகுதி நிரந்தர ஊனச் சான்றிதழ்

<u>**மூன்றாம் தரப்பினர் தரப்பு சான்றாவணங்கள்**</u> இல்லை

K SUDHARANI Digitally signed by K SUDHARANI Date: 2026.07.10 18:58:57 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**இயக்கவூர்தி விபத்து கோருரிமை அசல் மனு எண்.320/2023**

**தீர்வளிப்பு (அசல்/வரைவு)**

**நாள் 09.07.2026**